# தேடுமிடம்

எங்கோ ஒரு முட்புதரில்
பூ ஒன்றைப் பறிக்கச் சென்றேன்.
என் உடலெங்கும் காயங்கள்:
அந்த முட்கள் தந்த முத்தங்கள்.
    என்வீட்டுத் தோட்டத்தில்
    இல்லாத மலர்கள் இல்லை.

கையிலே ஓடேந்தி
தெருத் தெருவாய் அலைந்துவிட்டு
வெறுமையைக் கையிலேந்தி
வீட்டுக்குத் திரும்பி வந்தேன்.
    என் வீடே ஒரு பெரிய
    அன்னதான சத்திரம்தான்.

வெகுதூரம் நடந்து சென்றேன்
தாகத்தைத் தணித்துக் கொள்ள.
வறண்டிருந்த கிணற்றைக் கண்டு - என்
கண்ணீரைக் குடித்து நின்றேன்.
    என் வீட்டுக் கொல்லையிலே
    பொங்கிப் பாயுது புனித கங்கை.

என்னிடம் உள்ளதையே
வெளியே நான் தேடுகின்றேன்.
என்று நான் தெரிந்து கொள்வேன்
என்னுள்ளேயே பார்ப்பதற்கு?

---- ஆர்.எஸ்.மணி (கனடா)